க்கும் பெருநிறுவனங்கள் மற்றும் அதன் ஆதரவாளர்கள், ஆற்றிய அழிவுகரமான பங்கைப் பற்றிய கூர்மையான விமர்சனத்தை முன்வைக்கிறது. இந்த விமர்சனம் பரவலாக பகிரப்பட வேண்டும். சக மனிதர்கள் மீது அக்கறையுள்ள உலகம் மட்டுமே தொற்றுநோய்கள் மற்றும் பொது சுகாதார நெருக்கடி நிலைகளை சமாளிக்க முடியும் என்று கட்டுரை முடிகிறது. இத்தகைய மனிதநேய, சகமனித அக்கறை குறித்தே ஏகபோக பெருமூலதனமும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களும் நடுங்குகிறார்கள்.

**கருத்தியல் சுதந்திரம்**

மூன்று கட்டுரைகளைக் கொண்ட இரண்டாவது பகுதி, தொழில்நுட்பத்தில் நிகழும் அடிப்படை சட்டக மாற்றங்கள் (*paradigm shifts*) பற்றி விவாதிக்கிறது. முதல் கட்டுரை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சி மற்றும் இருபதாம் நூற்றாண்டில் அவற்றின் வளர்ந்துவரும் பரஸ்பர வினையாற்றல் (*interaction*) மற்றும் ஊடுருவல் (*inter-penetration*) ஆகிய இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டை கண்ணுறுவதை கடினமாக்குகின்றன என்பதைக் குறிப்பிட்டு, தொழில்நுட்பத்தை வெறும் "அறிவியலின் களச்செயலாக்கம்" (*applied science*) என்று கூறுவதை நிராகரிக்கிறது. "அறிவியலும் தொழில்நுட்பமும் அவை இயங்கும் சமூகம் என்ற ஒரு பெரிய அமைப்பின் துணை அமைப்புகளாகப் பார்க்கப்பட வேண்டும்" என வாதிடுகிறது. இரண்டாவது கட்டுரை, தொழில்நுட்பத்தில் கருத்தியல் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கான ஓர் உறுதியான வாதத்தை முன்வைக்கிறது. மூன்றாவது, சுதந்திரத்திற்குப் பிறகான முதல் இரண்டு பத்தாண்டுகளில் இந்திய அரசாங்கம் பின்பற்றிய கொள்கைகளில் சுயசார்பு பற்றிய பார்வையை பகுப்பாய்வு செய்கிறது. இந்தியாவின் ஆற்றல், உரம், தொலைத் தொடர்பு மற்றும் மருந்துத் துறைகள் தொடர்பான செழுமையான அனுபவங்களைக் கணக்கில் கொண்டு, உலகளாவிய அரசியல் பொருளாதாரத்தின் கட்டமைப்பிற்குள் தொழில்நுட்ப சிக்கல்களை ஆசிரியர் விவாதிக்கிறார். ஆதிக்கம் செலுத்தும் முன்னேறிய நாடுகள், தங்களிடமிருந்து புதிதாக சுதந்திரம் பெற்ற, ஒப்பீட்டளவில் தங்கள் சொந்தத் தொழில்நுட்பத்தை உருவாக்கி வளர்க்க முயலும் நாடுகள் எளிதாக தொழில்நுட்பம் பெறுவதைத் தடுக்கும் போக்கும், இதற்கு முற்றிலும் மாறாக, வளரும் நாடுகளுடன் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் சோசலிச நாடுகளின் வியக்கத்தக்க விருப்பமும் பிரச்சினையின் கவனிக்கத்தக்க அம்சங்கள்.

புத்தகத்தின் மூன்றாவது பகுதியில் உள்ள மூன்று கட்டுரைகள் பொது நல அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை விரிவாக விளக்குவதில் கவனம் செலுத்துகின்றன. இவற்றில் முதலாவது அறிவியல் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியை சமூக வரலாற்று கோணத்தில் இருந்து விவாதிக்கிறது. மேலும் முற்போக்கு இயக்கங்கள் அறிவியல் சார்ந்து நின்று, அறிவியலுக்கு முரணான அனைத்து பழைய/புதிய அணுகுமுறைகளையும் மூட நம்பிக்கைகளையும் உறுதியுடன் நிராகரிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இரண்டாவது கட்டுரை, சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும், அறிவியல் வளர்ச்சிக்கு இந்தியாவில் இடதுசாரி இயக்கம் ஆற்றிய பங்கு பற்றிய மிகத்தேவையான, விஷயத்தை சிறப்பாக விவாதிக்கிறது. மூன்றாவது கட்டுரை பாகிஸ்தானைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநரான குலாம் கிப்ரியாவின் 'பாகிஸ்தானில் தொழில்நுட்பத்தைக் கைக்கொள்ளல்' என்ற புத்தகத்தின் மதிப்புரை ஆகும். காலனித்துவத்திற்குப் பிந்தைய சமூக அமைப்பில் தொழில்நுட்ப வளர்ச்சியின் சிக்கல்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

புத்தகத்தின் நான்காவது மற்றும் இறுதிப் பகுதி இரண்டு ஆழமான கட்டுரைகள் மூலம் 'அறிவியல் அணுகுமுறையில் அமைந்த குடியரசைத் திட்டமிடுதல்' என்ற கருப்பொருளை விவாதிக்கிறது. இவற்றில் முதலாவது ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. ஆட்சியில் அறிவியல் மற்றும் அறிவியல் அணுகுமுறை மீதான தாக்குதல்களை விரிவாக அம்பலப்படுத்துகிறது; அதே நேரத்தில் உலகளாவிய அறிவியல் அறிவின் பரிணாம வளர்ச்சிக்கு இந்தியாவின் பங்களிப்புகளை வரலாற்றுத் தரவுகளின் மூலம் முறையாக அங்கீகரிக்கிறது. இரண்டாவது, அறிவியல் பார்வையுடனான ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்கான சவாலை ஆழமான நோக்குடன் நுணுக்கமாக விளக்குகிறது.

தெளிவாக எழுதப்பட்டுள்ள இந்நூலைப் படிக்கும்போது, இந்தியாவின் தற்போதைய ஆட்சியாளர்கள், இவ்வளவு சிறந்த பல்துறை சிந்தனையாளரை தேசத்திற்கு அச்சுறுத்தல் என்று முத்திரை குத்துவது நமக்கு வியப்பாக இல்லாவிட்டாலும், வருத்தம் அளிக்கிறது. மிகவும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், பிரபீர் புர்கயஸ்தா அறிவியல் அணுகுமுறையை உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பாதுகாக்கிறார். அறிவியலை நிராகரித்து குருட்டு நம்பிக்கை மற்றும் வெறுப்பு ஆகிய இரண்டையும் வளர்க்க விரும்புவோருக்கு, பிரபிர் புர்காயஸ்தா பெரும் அச்சுறுத்தலாக தெரிவது இயல்புதானே? ■



http://marxistreader.app



70 மணி நேர வேலை

# இன்ஃபோசிஸ் 'பேரரசரின்' ஆணவக்குரலை விரட்டியடிப்போம்

**விஜு கிருஷ்ணன்**

உலக வரலாற்றில், குறிப்பாக ஐரோப்பிய வரலாற்றில், ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிந்தைய, கி.பி. 6-ம் நூற்றாண்டு முதல் 15-ம் நூற்றாண்டு வரையிலான நெடிய காலகட்டம் 'மத்திய காலம்' என்று வரையறுக்கப்படுகிறது. இது முடிவுக்கு வந்து, 'நவீன யுகம்' துவங்கிய நேரத்தில், ஸ்பெயின் நாட்டை ஆண்டு வந்த மாமன்னர் இரண்டாம் பிலிப், 1594-ல், தனது சிறப்பு முத்திரையுடன் அரச ஆணை ஒன்றை வெளியிட்டார். "ஸ்பெயின் நாட்டில் இனிமேல் உழைப்பாளர்கள் அனைவரும் நாள் தோறும் காலையில் 4 மணி நேரம், பிற்பகலில் 4 மணி நேரம் என மொத்தம் 8 மணி நேரம் (மட்டும்) வேலை செய்வார்கள்" என்பதே அரசரது மேற்கூறிய சுருக்கமான ஆணையின் உள்ளடக்கம். இந்த ஆணையை, மன்னரது ராஜ பரிவாரங்கள் வீற்றிருக்கும் கோட்டைப் பகுதி முதல், நாட்டில் இயங்கி வரும் தொழிற்சாலைகள் வரை அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

http://marxistreader.app

மேலும், வேலை நேரமானது, சுட்டெரிக்கும் சூரியனின்வெப்பம் தொழிலாளர்களைப் பாதிக்காத வகையிலும், அவர்தம் உடல் நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் தன்மையிலும் சரியான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் எனவும் அரசரது ஆணை வலியுறுத்தியது. இது, மாட்சிமை தங்கிய ஸ்பெயின் மன்னர் தனது தயாள குணத்தாலும், தர்ம சிந்தனையாலும் அறிவு முதிர்ச்சியோடு வழங்கிய வெகுமதியோ, அன்புப் பரிசோ அல்ல. மாறாக, தனது ஆளுகைக்கு உட்பட்ட நாட்டில், 'இடையூறுகள்' எதுவும் இல்லாத, அமைதியான சூழல் நிலவிட வேண்டும் என்கிற அரசரது அவாவும், உந்துதலுமே இத்தகைய உத்தரவுக்குப் பின்புலமாய் அமைந்திருந்தது. அக்காலகட்டத்தில் அமெரிக்கக் கண்டத்திலும், பிலிப்பைன்ஸ் முதலான நாடுகளிலும் பெரும் அடக்குமுறையும், வன்கொடுமையும் மக்களின் மீது சர்வ சாதாரணமாய் ஏவி விடப்பட்டது. ஏன், ஸ்பெயின் தேசமும் கூட, ஆரம்ப நாட்களில் தனது சொந்த மக்களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு உட்படுத்தியும், வன்முறை மற்றும் கொடுங்கோன்மை மூலம் மக்களை அடிமைகளாக்கிக் கடினமான வேலைகளில் ஈடுபடுத்திச் சித்திரவதை செய்தும் ஒரு இரத்தம் தோய்ந்த சரித்திரத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

தொழிற்புரட்சியைத் தொடர்ந்து உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் துவக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவும் வியர்வை நிலையங்களாக, தொழிலாளர்கள் நிரம்பிய வியர்வைக் கூடங்களாக விளங்கின என்று கூறினால் அது மிகையல்ல. அத்தருணத்தில் தொழிலாளர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அவர்கள் வேலை செய்யும் புறச் சூழலோ, மிகவும் மோசமானதாக, அருவருக்கத்தக்கதாக, முழுவதும் பாதுகாப்பற்றதாக இருந்தன. ஊதியமும் மிகமிகக் குறைவாகவே வழங்கப்பட்டது. மிகச் சிறிய தவறுகளுக்குக் கூட மிகவும் கொடுமையான தண்டனைகள் என்கிற நிலைமை. வேலை நேரம் குறித்த எந்தவிதமான வரையறையுமின்றி, பகல், இரவு என எல்லாப் பொழுதும் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே, பிரிட்டனின் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவரும், ஜவுளி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டதோடு, மனிதாபிமானம் மற்றும் சமூகச் சிந்தனையை வெளிப்படுத்தி வந்தவருமான இராபர்ட் ஓவன், 19-ம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், 'ஒரு நாளைக்கு 10 மணி நேர வேலை' என்ற கருத்தை முன்வைத்துப் பேச ஆரம்பித்தார். அவர் தனது 'நியூ லனார்க்' நிறுவனத்தில் 10.5 மணி நேர வேலை என்பதை நடைமுறைப்படுத்தியதோடு, மனித குலத்தின் மகிழ்ச்சிக்காக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழிமுறையைத் தான் செயல்படுத்துவதாகவும், உலகின் எந்த மூலையிலும் தொழிலாளர்களின் நலன் குறித்த இப்படிப்பட்ட முயற்சி மேற்கொள்ளப்படலாம் என்றும் தெரிவித்தார். சில வருடங்களுக்குப் பிறகு, 1817-ல் '8 மணி நேர வேலை' குறித்தும் இராபர்ட் ஓவன் பேசத் துவங்கினார். அந்தக் காலகட்டத்தில் தான் 'எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் மனமகிழ்ச்சிப் பயன்பாடு' என்கிற புதிய முழக்கம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது.

இராபர்ட் ஓவன் நியூ லனார்க் காட்டன் மில்ஸ் தொழிற்சாலையின் உரிமையாளர் என்பதும், சமுதாயத்தின் நன்னடத்தை நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு, தொழிலாளர் நலன் குறித்த சீர்திருத்தங்களை மேற்கொள்ள அவர் பெருமுயற்சி மேற்கொண்டார் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது. இவ்வாறு வேலை நேரத்தைக் குறைத்து ஒருசில முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தொழிலாளர்களின் செயல் திறன் பெருகி, உற்பத்தியும் அதிகரித்து, இலாபத்தையும் உயர்த்த முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். கடுமையான உழைப்புச் சுரண்டல் காரணமாக,தொழிலாளர்களிடையே பரவலாக எழுந்த அதிருப்தி மனநிலை, உலகின் பல பகுதிகளிலும் மெதுவாக வேர்விடத் தொடங்கிய எதிர்ப்பு இயக்கங்கள் ஆகியனவும், இராபர்ட் ஓவனின் முடிவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. இராபர்ட் ஓவன் தொழிலாளர் நலன் மற்றும் உரிமையைப் பொறுத்தமட்டிலும், அவர் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்டுச் சிந்தித்தார் என்பதும், பிற அறிஞர்கள் தொழிலாளர் நலன் குறித்து விவாதிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஓவன் இதில் அக்கறை செலுத்தினார் என்பதும் உண்மையே. ஆயினும், அவரது முன்னெடுப்பில் தொழிலாளர் நலன் சார்ந்த வர்க்கக் கண்ணோட்டமோ, அவர்களது உழைப்பு மிகக் கணிசமான அளவில் சுரண்டப்படுவது பற்றிய மதிப்பீடோ, உபரி மதிப்பு குறித்த பார்வையோ எதுவும் இருக்கவில்லை. இந்த அடிப்படையிலேயே, அவரது கற்பனாவாத சோஷலிசக் கோட்பாடு, மார்க்சியக் கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதை நாம் அறுதியிட்டுக் கூற முடியும். உழைக்கும் மக்களை ஒருமுகப் படுத்துவதும், அவர்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டுவதுமே புதிய சமுதாய உருவாக்கத்திற்கான திறவுகோல்களாக விளங்குவன என்கிற புரிதலில் தான் மார்க்சிய அணுகுமுறையின் முக்கியத்துவம் புலப்படும்.

அன்றைய காலச் சூழலில் உழைக்கும் மக்களின் மீதான சுரண்டலின் கொடூரமும், கோரத் தாண்டவமும் எந்த அளவுக்கு இருந்து வந்துள்ளன என்பதை, 1833-ம் வருடத்திய பிரிட்டிஷ் தொழிற்சாலை சட்டத்தின் உட்கூறுகள் வாயிலாக நன்கு உணர்ந்து கொள்ளலாம். தொழிற்சாலைகளை 'ஒழுங்குபடுத்துவதற்காக' இயற்றப்பட்ட அந்தச் சட்டத்தின்படி, பெண்களும், 13 முதல் 18 வரை உள்ள பதின்பருவ குழந்தைகளும் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்திற்கு மேல் வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்ற விதி புகுத்தப்பட்டது. இதே போன்று, 9 முதல் 13 வரை வயதுள்ள குழந்தைகள் அதிகபட்சமாக 9 மணி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதிக்கப்படுவர் என்கிற அம்சமும் அந்தச் சட்டத்தில் இடம் பெற்றிருந்தது. இந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு தொழிற்சாலைகளில் எத்தகைய கொடூரமான நிலைமைகள் இருந்திருக்கும் என்பதை இதன் மூலம் எல்லோரும் கற்பனை செய்து கொள்ளலாம்.

1836-ல் பிரிட்டனில் உருவான சாசன இயக்கம் (Chartist Movement) தொழிலாளர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும், அவர்தம் வேலைநேரம் குறைக்கப்பட வேண்டும், மேம்பட்ட பணிச்சூழல் நிலவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்ததோடு, இத்தகு சீர்திருத்தங்களை வலியுறுத்தி போராட்ட அறைகூவலும் விடுத்தது. இத்தகு சூழல் பற்றி கார்ல் மார்க்ஸ் தனது 'மூலதனம்' நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "தொழிலாளர்களின் வேலைநேரத்தை வரையறை எதுவுமின்றி நீடித்துக் கொண்டே போவதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தியானது, மனித உழைப்பு சக்தியை, அதன் இயல்பான வளர்ச்சி மற்றும் செயல்திறனுடன் இயங்கவிடாமல் பெருமளவில் வீழ்ச்சி அடையச் செய்வதோடு, தொழிலாளர்களை அவர்களது வயதுக்குப் பொருத்தமின்றி மிகவும் முன்கூட்டியே கடுமையான உடல் மற்றும் மனச்சோர்வுக்கு உள்ளாக்குகிறது. மேலும், அத்தகு தொழிலாளர்கள் பெருமளவு உடல்நல பாதிப்புகளுக்கு ஆளாகி இளம் வயதிலேயே அகால மரணம் அடையவும் காரணியாகிறது. இவற்றின் மூலம் மகத்தான மனித உழைப்பு சக்தி மிகவும் வேகமான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப் படுகிறது." இந்தப் பின்னணியிலேயே சாசன இயக்கத்தின் வாயிலாக உழைப்பாளி மக்களின் குரல்கள் ஒலிக்கத் துவங்கின.

சில ஆண்டுகள் சென்ற பின் 1847-ல் தான் தொழிற்சாலை சட்டம் புதிய பிரிவுகளுடன் திருத்தியமைக்கப்பட்டு, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, பெண்களுக்கும், பதின்ம வயது குழந்தைகளுக்கும் வேலை நேரம் 12 மணி யிலிருந்து 10 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாகவே, இது உள்ளூர் வழக்கத்தில் '10 மணி நேர வேலை சட்டம்' என்று அழைக்கப்படலாயிற்று. இந்தக் காலத்து நாராயண மூர்த்திகள் மற்றும் மனீஷ் திவாரிகளைப் போல, 176 வருடங்களுக்கு முந்தைய காலகட்டத்திலும், புதிய சட்டப் பிரிவுகளுக்கு ஒரு சிலர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். சிறுவர்கள் உள்பட தொழிலாளர்கள் தங்களது உழைப்பை 'விற்பனை செய்வதற்கு' அரசாங்கம் 'கட்டுப்பாடுகளை' விதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் வாதிட்டனர். இந்தப் பிரச்னை பற்றி கார்ல் மார்க்ஸின் நூலில் தனித்துவமான குறிப்பு காணப்படுகிறது. "தொழிலாளர்களின் வேலை நேரத்திற்கு வரம்பு நிர்ணயிப்பதும், கட்டுப்பாடுகள் விதிப்பதும், அதன் வழியே தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, எல்லையற்ற இலாபம் ஈட்டுவதற்குத் தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அது மட்டுமன்றி, சந்தையில் எந்தவித ஆய்வுமின்றி கண்மூடித்தனமாக நடைமுறைப்படுத்தப்படுகிற வழங்கல்

மற்றும் தேவையின் சட்டபூர்வ விதிகளுக்கும் (*Supply & Demand Laws*), ஒட்டுமொத்த சமுதாயத்தின் தேவைகளைக் கணக்கில் கொண்டு மேற்கொள்ளப்படும் ‘சமூக உற்பத்தி‘ (*Social Production*) காரணி களுக்கும் இடையே நடைபெறுகிற மிகப்பெரிய போராட்டத்தின் ஒரு அங்கமாகவும் இது விளங்குகிறது. இதில் வழங்கல் மற்றும் தேவை விதிகள் நடுத்தர வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. சமூக உற்பத்தி தொடர்பான அம்சங்களோ, உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரத்தை அடையாளப்படுத்துகின்றன” என்று மார்க்ஸ் தெளிவாக வரையறை செய்கிறார். 10 மணி நேரம் வேலை என்று வரையறை செய்யப்பட்டதை, அன்றைய காலச் சூழலில், தொழிலாளர் நலன் சார்ந்த கொள்கை மற்றும் கோட்பாட்டிற்குக் கிடைத்த ஒரு மகத்தான வெற்றியாகவே மார்க்ஸ் கருதினார். பல்வேறு எதிர்ப்புகளையும் மீறி இவ்வாறு வரையறை செய்யப்பட்டது, வரலாற்றில் முதல் முறையாக, நடுத்தர வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரமானது, அவமானகரமான முறையிலும், கேலிக்குரிய வகையிலும், உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரத்திடம் தோல்வியைச் சுவைத்துள்ளது. பிரிட்டனையடுத்து பிரான்ஸ் நாட்டு தொழிலாளர்களுக்கும், 1848ம் வருடத்திய புரட்சியின் பயனாக, புதுப்புது சலுகைகளும், உரிமைகளும் கிடைத்தன. இதைத் தொடர்ந்து, ஒரு நாளில் 12 மணி நேரத்திற்கு மேல் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தக் கூடாது என்கிற விதிமுறைக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து பெற்று, பிரான்ஸ் தொழிலாளர்கள் சாதனை படைத்தனர்.

இவற்றையடுத்து 19-ம் நூற்றாண்டின் மையப் பகுதியில் ‘எட்டு மணி நேர வேலை’ என்கிற கோரிக்கையை முன்னிறுத்தி, உலகின் பல பகுதிகளிலும் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் தன்னெழுச்சியாக வெடிக்கத் துவங்கின. 1866-ல் ஜெனிவாவில் நடைபெற்ற பன்னாட்டு உழைப்பாளர்கள் சங்கத்தின் (*International Workingmen‘s Association*) சிறப்பு மாநாடு, ஒரு நாளைக்கு எட்டு மணிநேரம் என்று உயர்ந்தபட்ச வரம்பு சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. சிகாகோ நகரத்தில், புகழ்பெற்ற மெக்கோர்மிக் அறுவடை இயந்திர உற்பத்தி தொழிற்சாலையிலும் (*McCormick Harvesting Machine Company*) வேறு சில பகுதிகளிலும் 1886-ம் ஆண்டு மே முதல் நாளன்று பெரும் திரளானோர் பங்கேற்புடன் துவங்கிய தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டமும், மூன்று நாட்களுக்குப் பின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு படுகொலைகளும் ‘எட்டு மணி நேர வேலை‘ என்பதைத் தொழிலாளர்களின் முதன்மையான, முக்கியமான கோரிக்கையாக உருப்பெறச் செய்தன. இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவு பேரெழுச்சியுடன் ‘எட்டு மணி நேர வேலை‘ என்னும் முழக்கம் உலகம் முழுவதிலும் எதிரொலித்தது. 1889 முதல் உலகத் தொழிலாளர்களின் எழுச்சி நாளாக மே தினம் அனுசரிப்பும் துவங்கியது.

உலகின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த போராட்டங்களின் பின்னணியில், 1915-ம் வருடம் நவம்பர் மாதம் உருகுவே நாட்டில் ‘எட்டு மணிநேர வேலை‘ முறை குறிப்பிட்ட சில பணிகளுக்கு அமல்படுத்தப்பட்டது. 1917-ல் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட்டு சோவியத் யூனியன் உருவானதும் அங்கு அனைத்துவிதமான வேலைகள் மற்றும் தொழில்முறை பணிகளுக்கும் ‘எட்டு மணி நேரம் வேலை‘ என்பது நடைமுறைக்கு வந்தது. அதன் எதிரொலியாக வேறு பல நாடுகளும் ‘எட்டு மணி நேர வேலையைச் செயல்படுத்திட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாயின. வேண்டா வெறுப்பாக இதை அமல் படுத்திய மேற்குலக நாடுகள், ‘கம்யூனிஸ்ட் அபாயம்’ சூழ்ந்துவிட்டதாகக் கூக்குரலிட்டன. உலகம் முழுவதும் உழைக்கும் மக்கள், மிகுந்த உறுதிப்பாட்டுடன், எழுச்சியோடு நடத்திய போராட்ட இயக்கங்களின் பலனாகவே, ‘எட்டு மணி நேர வேலை‘ கோரிக்கையை ஏற்றுக் கொண்டாக வேண்டிய கட்டாயச் சூழலுக்கு ஆளும் வர்க்கம் தள்ளப்பட்டது என்று சொன்னால் அது மிகையல்ல. சுருங்கக் கூறின், இந்தக் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றியானது, ஆளும் வர்க்கம் தனது பெரும் கருணையினால் வழங்கிய சன்மானமோ, யாசகமோ அல்ல. இது உழைக்கும் வர்க்கம் தனது தொடர்ச்சியான, சமரசமற்ற போராட்டத்தின் பயனாக வென்றெடுத்த மகத்தான உரிமை ஆகும்.

இந்தியாவிலும் 1881-ல் ரிப்பன் பிரபு தலைமையிலான பிரிட்டீஷ் இந்திய அரசு நிர்வாகம், இந்திய தொழிற்சாலைகள் சட்டத்தைக் கொண்டுவந்தது. இந்தச் சட்டம் 7 முதல் 12 வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு நாளின் உயர்ந்தபட்ச வேலை 9 மணி நேரம் என்று வரம்பு நிர்ணயம் செய்தது. அச்சமயத்தில் பிரிட்டனில் இயங்கிவந்த தொழிற்சாலைகளுக்குப் போட்டியாக இந்தியாவில் செயல்பட்டு வந்த நிறுவனங்கள், இங்கு நிலவிய மிகவும் குறைவான கூலி மற்றும் அதிகமான வேலை நேரம் காரணமாக சாதகமான வணிகச் சூழலில் இருந்து வந்தன. இந்தப் பின்னணியிலேயே, பிரிட்டன் தொழிலதிபர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க, பிரிட்டீஷ் கம்பெனிகளுக்குப் போட்டியாக விளங்கும் இந்திய ஆலைகளுக்கு மட்டும் பொருந்தக்கூடிய வகையில், புதிய சட்டம் அமலுக்கு வந்தது. இவ்வாறு சட்டம் பிறந்ததே, பின்னாட்களில் தொழிலாளர்களுக்குப் பல்வேறு உரிமைகள் வழங்கக் கோரியும், வேலை நேரம் குறைப்பை வலியுறுத்தியும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றி வளர்வதற்குப் புதிய பாதை அமைத்துக் கொடுத்தது. இந்தியாவின் பல மாகாணங்களிலும் பல்வேறு வகையான தொழிலாளர் இயக்கங்கள் இக்காலகட்டத்தில் துளிர்விடத் தொடங்கின.

1917-ல் ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி ஏற்பட்டு, சோவியத் யூனியன் உதயமானதைத் தொடர்ந்து, இந்தியாவின் பல பகுதிகளிலும் தொழிற்சங்கங்கள் துவங்கப் படுவதற்கான முன்னெடுப்புகள் ஆங்காங்கே தென்படலாயின. 1918-ம் ஆண்டு சென்னையில் திரு.வி. கல்யாணசுந்தரனார், பி.பி. வாடியா ஆகிய இரு பெரும் தலைவர்களின் முன்முயற்சியில் துவக்கப்பட்ட ‘மெட்ராஸ் லேபர் யூனியன்’, இந்தியாவின் முதலாவது தொழிற்சங்கம் என்ற பெருமையைப் பெற்றது. இதைத் தொடர்ந்து அதே சென்னை மாநகரத்தில் தான் 1923-ல் இந்தியாவிலேயே முதன் முறையாக தோழர் சிங்காரவேலர் தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது. தொழிலாளர்களைத் திரட்டி போராட்ட இயக்கங்களை முன்னெடுத்த சிங்காரவேலர், பொதுவான தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம், சுரங்கப் பணியில் ஈடுபடுவோருக்கும், பாலூட்டும் பெண் தொழிலாளர்களுக்கும் 6 மணி நேரம், குழந்தைகளுக்கு 4 மணி நேரம் என வேலைக்கான கால நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரிட்டீஷ் அரசிடம் சிங்காரவேலர் வலிமையான முறையில் கோரிக்கை எழுப்பினார். மேலும், தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக்கொள்ள அனுமதி, வருங்கால வைப்பு நிதி பலன்கள், வீட்டு வசதி, பெண் தொழிலாளர்களுக்குப் பேறுகால விடுப்பு வசதி உள்ளிட்ட பல சலுகைகளும் கோரிக்கைப் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. இவ்வாறு தொழிலாளி வர்க்கத்தின் பலதரப்பட்ட பிரச்னைகளும், கோரிக்கைகளும் பொது அரங்கில் விவாதப் பொருளாக மாறிய பின்னணியில் தான், 1920-ல் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (*AITUC*) உதயமாயிற்று. எட்டு மணி நேர வேலை உள்ளிட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகள், தொழிற்சங்கத்தின் குரலாக உரத்து ஒலிக்கத் துவங்கியது. இடைவிடாது நடைபெற்ற இத்தகு இயக்கங்களின் நீட்சியாக, 1942-ல் வைஸ்ராஸ் கவுன்ஸிலில் தொழிலாளர் துறைக்கான உறுப்பினர் என்ற முறையில் எட்டு மணி நேர வேலைக்கான தீர்மானத்தை முன்மொழிந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கார், அது நிறைவேற்றப்பட்டு செயல் வடிவம் பெறுவதையும் உறுதிப்படுத்தினார். பின்னர் சுதந்திர இந்தியாவில் 1948-ல் புதிதாகத் திருத்தி இயற்றப்பட்ட ‘தொழிற்சாலைகள் சட்டம்‘ (*Factorids Act* 1948), அரை மணி நேர இடைவேளையுடன் கூடிய 9 மணி நேர வேலை என்பதற்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கியது. மேலும், ஒரு வாரத்திற்கான அதிகபட்ச பணிக்காலம் 48 மணி நேரம் என்னும் வரம்பும் அச்சட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

இந்தியாவில் அண்மையில் தொழிலாளர்களின் முழு ஆதரவோடு விவசாயிகள் ஓராண்டுக் காலமாக உருக்குப்போன்ற உறுதியுடன் நின்று, வென்று காட்டிய வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டமும், அதன் பயனாக மூன்று வேளாண் சட்டங்கள் தூக்கியெறியப்பட்டதும் இன்றளவும் ஆட்சியாளர்களைச் சுற்றிச் சுழன்று வட்டமிட்டுத் துன்புறுத்தும் அம்சமாக அமைந்துள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் தொடர்ச்சியான போராட்ட, பிரச்சார இயக்கங்களின் பயனாக, மகத்தான தொழிற்சங்க உரிமைச் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்கிற நான்கு சட்டத் தொகுப்புகளும் ஏட்டளவில் நிறைவேறியிருந்தாலும், நடைமுறையில் செயல்படுத்தப்பட முடியாத சூழல் நிலவுகிறது என்று கூறினால் அதுவும் மிகையல்ல. இந்தப் பின்னணியிலேயே

http://marxistreader.app

http://marxistreader.app

இன்ஃபோசிஸ் பேரரசரின் 'வார வேலை 70 மணி நேரம்' என்கிற கூக்குரல் வெள்ளோட்டம் விடப்படுகிறது. திருவாளர் நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி அரசின் குரலான 'தினசரி 12 மணி நேரம், வாரத்திற்கு 72 மணி நேரம்' என்கிற கார்ப்பரேட்டுகளின் ஆசையை எதிரொலிக்கும் வண்ணம் இத்தகு விவாதம் திட்டமிட்டுத் தூண்டிவிடப் படுகிறது. எளிதில் வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள நடுத்தர வர்க்கத்தின் எண்ணவோட்டமாக இதைச் சித்தரித்து, புதிய தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளின் மிகவும் கொடூரமான அம்சங்களை மூடி மறைக்கவும் இது முற்படுகிறது.

இன்ஃபோசிஸ் தலைவரின் 70 மணி நேர வேலை என்னும் ஆணவப் பேச்சுக்கு, காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் திரு. மனீஷ் திவாரி தொடங்கி, கார்ப்பரேட் ஆதரவு பொருளாதார வல்லுநர்களும், ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழலாய்ச் செயல்படும் ஊடகங்களும் பலத்த வரவேற்பையும், பெரும் ஆதரவையும் உடனடியாக வழங்கியதை இத்தருணத்தில் உற்றுநோக்க வேண்டியுள்ளது. உலகம் முழுவதும் உழைப்பாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்னும் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிற ஒரு காலகட்டத்தில், இந்தியாவில் அதற்கு நேர்மாறாக, வேலை நேரத்தை உயர்த்த வேண்டும் என்கிற கூக்குரல் திட்டமிட்டு எழுப்பப்படுவதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

உலகளாவிய ஒப்பீட்டைக் கூற வேண்டுமாயின், ஸ்வீடன் நாட்டில் 1885-ல் உற்பத்தித்துறை ஊழியர்களின் வேலைப்பளு ஒரு வாரத்திற்கு 64 மணி நேரம் என்றிருந்தது. அது முறையே 1905-ல் 60 மணி நேரமாகவும், 1919-ல் 55 மணி நேரமாகவும் படிப்படியாகக் குறைக்கப் பட்டது. அதே ஆண்டு ஆகஸ்ட் 4-ல் ஸ்வீடனில் 8 மணி நேர வேலையைச் சட்டமாக்குவதற்கான முன்மொழிவு அறிமுகம் செய்யப்பட்டது. இருப்பினும் நீண்ட தாமதத்திற்குப் பின் ஜனவரி 1, 1920ல் நடைமுறைக்கு வந்த இந்தச் சட்டத்தின் கீழ், வாரம் ஒரு நாள் விடுமுறையும் சேர்த்து, ஒரு வாரத்திற்கான பணிச்சுமை 48 மணி நேரம் என அறிவிக்கப்பட்டது. தற்போது வாரத்திற்கு 5 நாள் என்கிற தன்மையில் ஒரு வாரத்திற்கான பணிக் காலம் 40 மணி நேரமாகக் குறைக்கப்பட்டு விட்டது. அமெரிக்கா, நார்வே உள்ளிட்ட பல நாடுகளில் இந்த 40 மணி நேரம் தான் தற்சமயம் பின்பற்றப்பட்டு வருகிறது. ஸ்விட்சர்லாந்தில் ஒரு வாரத்திற்கான மொத்த வேலை நேரம் 45 மணி நேரத்திற்கு மிகாமல் இருந்திட வேண்டும் என்று விதிமுறை உள்ளது. தற்போதைய தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சியின் அடிப்படையில் வாரத்திற்கு 4 நாட்கள் வேலை என்பது அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை பல நாடுகளில் வலுவாக எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால் இந்தியாவில் ஆளும் வர்க்கத்தின் சிந்தனைப் போக்கு வேறு விதமாக உள்ளது.

கர்நாடகாவில் பிஜேபி ஆட்சியிலிருந்தபோது, 'கர்நாடகா தொழிற்சாலைகள் (திருத்த) சட்டம்' ஒன்றை நிறைவேற்றி, தொழிலாளர்களை 12 மணி நேரம் வேலையில் ஈடுபடுத்த அனுமதி வழங்கியது. தற்போது பதவிக்கு வந்துள்ள காங்கிரஸ் அரசாங்கமும் அச்சட்டத்தை மாற்றாமல் அப்படியே அமல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலும் திமுக அரசு தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தி, 12 மணி நேர வேலைக்கு ஒப்புதல் வழங்கும் அறிவிக்கையை கடந்த 23.04.2023-ல் வெளியிட்டது. ஆனால் ஒட்டுமொத்த தமிழக தொழிற்சங்க இயக்கத்தின் உடனடியான எதிர்வினை மற்றும் கடுமையான எதிர்ப்புகளையடுத்து, மேற்சொன்ன ஆணையைத் தமிழக அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது. "தொழிலாளர் வர்க்கத்திற்குப் பாதகமான ஒரு முடிவைப் பிடிவாதமாகச் செயல்படுத்த முனைவதைவிட, தவறை ஒப்புக்கொண்டு சரி செய்து கொள்வது சாலச் சிறந்தது" என தமிழக முதல்வர் வெளிப்படையாகக் கூறியது இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.

திருவாளர் நாராயணமூர்த்தி அவர்களின் இன்ஃபோசிஸ் நிறுவனம் பொருள் உற்பத்தி எதிலும் ஈடுபடுவதில்லை. தொழில்நுட்பத்தையும் தயாரிப்பதில்லை. அது ஒரு 'சேவை வழங்குநர்' (*Service Provider*) நிறுவனம் மட்டுமே. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் அதிகமாக வேலை செய்தால், சேவை வழங்குநர் மிக அதிக அளவில் வருவாய் ஈட்டி, பெருமளவில் இலாபமும் குவித்திடுவார். இத்தகு சேவை நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறும் சேவைக் கட்டணத்தில் மிகவும் சொற்பமான அளவே ஊழியர் நலனுக்கெனச் செலவிட முன்வருகின்றன. இந்தியாவில் மிகப்பெரிய அவுட்சோர்ஸிங் கம்பெனியாக விளங்கும் இன்ஃபோசிஸ் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களைப் பல்வேறு வழிகளில் துன்புறுத்தி வருவதாகவும், குறைவான ஊதியத்தில், மோசமான பணிச் சூழலில் அவர்கள் உழன்று வருவதாகவும் நிறைய புகார்களும், குற்றச்சாட்டுகளும் ஏற்கனவே இருந்து வருகின்றன. அங்கு பணியாற்றும் சிறந்த கல்வித் தகுதியும், அறிவாற்றலும் படைத்த பொறியாளர்கள், எல்லா நேரங்களிலும் வேலையிழப்பு/வேலை பறிப்பு மிரட்டல்களை எதிர்நோக்கியுள்ளனர். நிர்வாகத்தால் தொழில்நுட்பக் கூலித் தொழிலாளர்களாகவே (*Cyber-coolids*) அவர்கள் நடத்தப்படுகின்றனர். இத்தகைய எண்ணப்போக்கு கொண்ட கார்ப்பரேட் பெருவணிகர்களுக்கும், நவீன தாராளமயத்துக்கு வக்காலத்து வாங்கி பக்கம் பக்கமாக எழுதிக் குவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், ஏறத்தாழ நூறு வருடங்களுக்கு முன்பு, 1926-லேயே 'வாரத்திற்கு 5 நாள் / 40 மணி நேரம் வேலை' என்கிற கோட்பாட்டை மோட்டார் தொழிலின் முன்னோடியாக விளங்கிய ஹென்றி போர்டு, ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று என்பதை அடிக்கோடிட்டு எடுத்துரைக்க வேண்டும்.

ஆக, தெளிவாகக் கூறுவதென்றால், ஒரு வேலை நாளின் பணி நேரத்தை நீடித்துக் கொண்டே போக முடியாது. கடிகார முட்கள் பின்னோக்கி நகர இயலாது. காலச் சக்கரத்தைப் பின்னோக்கி நகர்த்திப் பழைய இருண்ட நாட்களுக்கு எடுத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது. பல தசாப்தங்களுக்கு முன்பு, பணம் படைத்தவர்கள் வகுத்த விதிகளுக்கிணங்க, தொழிலாளர்களின் வேலை நேரம் தினந்தோறும் 12, 14, 16 ஏன் 18 மணி நேரம் என்று மாற்றப்படுவதை ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. இன்னல்களையும், இடர்களையும், எண்லடங்காக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, ஆளும் வர்க்கத்தின், ஆதிக்க சக்திகளின் ஆணைகளுக்கு அடிபணிந்து, எப்போதும் உழைத்துக் கொண்டே இருக்கும் அடிமைகளாகத் தங்களை மாற்றிக் கொள்ளத் தொழிலாளர்கள் ஒருக்காலும் தயாராக இருக்கப் போவதில்லை. தொழிலாளர்களின் உழைக்கும் திறன் கடைசிச் சொட்டு வரை உறிஞ்சப்பட்டு, துடைத்துத் தூக்கியெறியப்படும் கொடூரத்தைக் கைகட்டி வேடிக்கை பார்க்கும் அவலம் அரங்கேறப்போவதுமில்லை. தேவைப்படுகிற ஓய்வு, போதிய அளவு உறக்கம், சமூக ரீதியான தேவைகள், அறிவார்ந்த பணிகள், உடல்நலன் சார்ந்த பயிற்சிகள், குடும்பம், குடும்ப வாழ்வோடு இணைந்த பலவிதமான தேவைகள் என அனைத்திற்கும் நேரம் ஒதுக்கீடு செய்வதும், அவற்றை உரிய முறையில் நிறைவேற்றுவதும் ஒவ்வொருவருக்கும் மிகவும் இன்றியமையாதவை. தவிர்க்க இயலாதவையும் கூட. ஒருசில உலகளாவிய பெரும் செல்வந்தர்களின் முடிவே இல்லாத இலாப வேட்கைக்கும், எல்லையே இடப்படாத சொத்துக்கள் சேகரிக்கும் பேராசைக்கும் உழைப்பாளிகளாய் விளங்கும் கோடானுகோடி மக்களின் உரிமைகளும், நல்வாழ்வும் பலியிடப்படக் கூடாது.

மாமேதை மார்க்ஸ் தனது 'மூலதனம்' நூலின் முதலாம் பாகத்தில் வேலை நாள், உபரி உழைப்பைப் பெருக்கிடும் உந்துதல், சட்டரீதியான வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படாமல் தாராளமாய் நடந்தேறும் உழைப்புச் சுரண்டல் என அனைத்து அம்சங்களையும் விவரித்துள்ளார். மேலும் அவர், "மூலதனம் என்பது ஒரு உயிரற்ற ஜடம் போன்றது. கல்லறையிலிருந்து எழும் பிணந்தின்னிப் பிசாசைப் போல, உழைப்பாளி மக்களின் இரத்தத்தையும், வியர்வையையும் உறிஞ்சுவதன் வாயிலாகவே மூலதனம் உயிர் வாழ்கிறது. தொழிலாளர்களை அதிகமாக, மிக அதிகமாக உறிஞ்சுவதன் மூலம் அது தனது ஆயுளை மேலும், மென்மேலும் நீடித்துக் கொள்கிறது. முதலாளிகள், பணி செய்வோரின் உழைப்புச் சக்தியை நுகர்வதற்கு எடுத்துக் கொள்ளும் காலமே, தொழிலாளர்களின் வேலை நேரமாக நிர்ணயமாகிறது" என்றும் இதை விளக்கியுள்ளார்.

இத்தகு சூழலில் தொழிலாளர்களின் மதிப்பு வாய்ந்த, மகத்தான உழைப்பு சக்தியை, உலக அளவில் ஆதிக்கம் செலுத்தத் துடிக்கிற ஒரு சில செல்வச் சீமான்களின் பேராசைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்த முற்படும் சூழ்ச்சிகளும், சதிகளும் முழுவதுமாய் முறியடிக்கப்பட வேண்டும். முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும்.

**– தமிழ் வடிவம் : கடம்பவன மன்னன்**

http://marxistreader.app

http://marxistreader.app

... முன் உள்அட்டை தொடர்ச்சி

பரிமாணங்களை வெளிக்கொணர்கிறது. மார்க்சின் எழுத்துக்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது மட்டுமல்ல; மார்க்சின் எழுத்துக்களுக்கு அடிப்படையாக இருந்த மார்க்சின் எண்ண வோட்டத்தை ஆழமாக புரிந்து கொள்ளும் வகையில் இந்த உரையாடல்கள் அமைந்துள்ளன.

தோழர் விஜய் பிரசாத் உலக அளவில் செயல்பட்டு வரும் மார்க்சிய செயல்பாட்டாளர். மார்க்சியத்தை உயர்த்திப் பிடித்து, போராடும் உழைக்கும் வர்க்க இயக்கங்களின் தத்துவார்த்த புரிதலை மேம்படுத்தும் படைப்புக்களை விஜய் பிரசாத் அளித்து வருகிறார்.

அய்ஜாஸ் அவர்களின் உயரிய மார்க்சிய சிந்தனைகள் தெளிந்த நீரோட்டமாக வெளிவரும் வகையில் விஜய் பிரசாத் உரையாடலை ஒருங்கிணைக்கிறார். கனமான, தத்துவக் கட்டுரை களை, கட்டுரை வடிவத்தில் படிக்கும்போது சிலருக்கு ஏற்படும் சோர்வு, இந்த உரையாடல் வடிவ படைப்பில், உரையாடலோடு ஒன்றிப் போகும்போது ஏற்படுவதில்லை.

நூலின் முன்னுரையில் விஜய்பிரசாத் குறிப்பிடு வது போன்று, மார்க்ஸ் பொது தளத்தில் பொருளாதார அறிஞராகவே முன்னிறுத்தப்படுகிறார். மார்க்சின் பொருளாதாரம் பற்றிய பங்களிப்பு மகத்தானதுதான் என்பதில் ஐயமில்லை. உண்மையில்,மார்க்ஸ் முதலாளித்துவத்தை வீழ்த்தி, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுகிற நிகழ்வைப் பற்றி ஏராளமாக எழுதியுள்ளார். அவரது புரட்சிகர அரசியல் பார்வையை வெளிப்படுத்தும் மார்க்சின் எழுத்துக்கள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை.

அதிலும் இன்று முதலாளித்துவத்தின் நேரடித் தாக்குதல் உழைக்கும் மக்கள் மீது அதிகரித்துள்ள நிலையில், வலதுசாரி அரசியலை பக்கபலமாக வைத்துக் கொண்டு, முதலாளித்துவ கருத்தியல் ஆயுதபாணியாக மாறியுள்ள நிலையில், புரட்சிகர அரசியல் இன்று அவசரத் தேவையாக உள்ளது. அதற்கு மார்க்சின் புரட்சிகர அரசியல் பார்வை குறித்த ஆழமான புரிதல் தேவை. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் சிறந்த கையேடாக இந்த உரையாடல் நூல் திகழ்கிறது.

இந்த உரையாடல் மார்க்ஸ் ஏங்கெல்சின் நான்கு நூல்களை மையமாக வைத்து நிகழ்த்தப்பட்டுள்ளது.

1) ஜெர்மன் சித்தாந்தம் (1845 - 46)

2) கம்யூனிஸ்ட் அறிக்கை (1848)

3) லூயி போனபர்ட்டின் பதினெட்டாம் புரூமர் (1852)

4) பிரான்சில் உள்நாட்டுப் போர் (1871)

**மார்க்சிய தத்துவ வளர்ச்சி**

இதில் “ஜெர்மன் சித்தாந்தம்” மார்க்சின் சிந்தனை, மார்க்சிய தத்துவமாக வளர்ந்த நிகழ்வை, தத்துவார்த்த வளர்ச்சியை எடுத்துரைக்கிறது.

ஹெகல், பாயர்பேக் போன்ற தத்துவ ஞானிகளின் தத்துவங்களை விமர்சன ரீதியில் கருத்துப் போராட்டம் நடத்தி, மார்க்சும், ஏங்கெல்சும் தங்களது வரலாற்றுப் பொருள்முதல்வாத தத்துவ நிலை பாட்டிற்கு வந்த வளர்ச்சிப் போக்கை இந்த உரை யாடல் நமக்கு வழங்குகிறது. இந்த உரை யாடலின் ஊடாக ஏராளமான சுவாரசியமான தகவல்களையும், விவரங்களையும் அய்ஜாஸ் அவர்களும், விஜய்பிரசாத்தும் அளிக்கின்றனர்.

மனித நடைமுறையே வரலாற்றை முன்னெடுக் கிறது; இதிலிருந்து துவங்கி, மனித உற்பத்தியே மையமானது என்கிற நிலைக்கு மார்க்ஸும், எங்கெல்சும் வந்தடைகின்றனர். வரலாற்றை இயக்கு வது உற்பத்தியும், உற்பத்தி உறவுகளுமே.

மனித நடைமுறை வரலாற்றைப் படைப்பதில், வரலாற்றின் மீது வினை புரிவதில் மையமானது - தத்துவ அறிவின் அடைப்படையே மனித நடை முறைதான். மார்க்சுக்கு முந்தைய தத்துவங்களை எதிர்த்துப் போராடி மேற்கண்ட கருத்துக்களுக்கு மார்க்ஸ் வந்தடைகிறார்.

இயற்கை அல்லது பொருள் அனைத்தும் மாறாமல் நிலையானதாக இருப்பதில்லை. அனைத்தும் இயக்கத்தில் இருக்கிறது. சமூக உறவுகளுக்கு வரலாற்றுப் பின்புலம் இருப்பது போன்று, இயற்கைக்கும் வரலாற்று பின்புலம் உண்டு. இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாத தத்துவ நிலைபாடுகளுக்கு மார்க்ஸ் வந்தடை கிறார். ஹெகல், பாயர்பேக் சிந்தனைகளை உள்வாங்கி, அவைகளை விமர்சித்து, அவர்கள் தாக்கத்திலிருந்து வெளியேறி, தனித்த நிலைபாடு களுக்கு மார்க்சும் ஏங்கெல்சும் வந்தடைகிற நிகழ்வை - உரையாடல் தெளிவாக வெளிக்கொணர்கிறது.

மனித நடைமுறை என்பது ஜெர்மன் தத்துவத்தில் உற்பத்தியாக பரிணமிக்கிறது. எனவே, வரலாறு என்பது உற்பத்தியின் வரலாறாக, உற்பத்தி முறைகளின் மாற்றங்களாக பார்க்கும் பார்வை விரிவடைகிறது. உழைப்புப் பிரிவினை, கூலி உழைப்பு, உழைப்புச் சுரண்டல் உள்ளிட்ட மார்க்சிய கருத்தாக்கங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

முரண்பாடுகள் வினையாற்றி வளர்ச்சி ஏற்படு வதை கருத்து அல்லது சிந்தனையில் மட்டும் கண்டதால், ஹெகல் தத்துவம் கருத்து முதல்வாத தத்துவம் ஆனது. கருத்தில், சிந்தனையில் வினைபுரியும் முரண்பாடுகள் அடிப்படையில் சமூக வாழ்வில் வினையாற்றும் முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகவே உள்ளன என்பதனை மார்க்ஸ் கண்டறிந்தார்.

அய்ஜாஸ் பேசும்போது மார்க்ஸின் கம்யூனிசம் பற்றிய கருத்தை விளக்குகிறார். முதலாளித்துவ முரண்பாடுகளின் வெடிப்பாகவே கம்யூனிசம் தர்க்க ரீதியாக வளர்ச்சி பெறுகிறது என மார்க்ஸ் கருதி னார். வரலாற்றின் இயக்க வளர்ச்சியில் வரலாற்று ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் எழுகிற அமைப்பாக கம்யூனிசம் விளங்குகிறது.

**வரலாற்றின் தர்க்கம்**

கம்யூனிஸ்ட் அறிக்கையில், புதிய மாற்று சமுதாயத்தை கட்டமைப்பது பற்றியும், அதற்கான அரசியல் நடைமுறை பற்றியும் மார்க்ஸ் எழுது கிறார்.

கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸ் அவரது சமகால முதலாளித்துவத்தை மட்டும் விளக்க வில்லை; முக்கியமாக, முதலாளித்துவத்தின் தர்க்கரீதியான இயக்கம் மற்றும் வளர்ச்சியை விளக்குகிறார். தேசிய எல்லைகளையெல்லாம் தாண்டி, முதலாளித்துவ உற்பத்தி விரிவடைந்து கொண்டே இருக்கும். இதன் விளைவாகவே பாட்டாளி வர்க்கம் ஒன்றுபடுவதும் வர்க்கப் போராட்டம் நடப்பதும், இறுதியில் சமூகம் மாற்றி யமைக்கப்பட்டு மறுகட்டமைப்பு செய்யப்படுவதும் நிகழ்கிறது. இந்த மாற்றம் தவிர்க்க முடியாமல் வந்தே தீரும் என்று வறட்டு நம்பிக்கையுடன் சொல்லப் பட்டதல்ல. முதலாளித்துவ இயக்கத்தின் தர்க்க ரீதியான விளைவாகவே சமூக மாற்றம் ஏற்படுகிறது.

மார்க்ஸ் முதலாளித்துவத்தை வீழ்த்திட பணி யாற்றுவதிலும், புரட்சிகர இயக்க முன்னேற்றத்தி லும் என்றுமே நம்பிக்கை இழந்ததில்லை. தத்து வார்த்தப் பணிகளோடு இணைந்து வர்க்க இயக்க வளர்ச்சியிலும் மார்க்ஸ் பெரும் அக்கறை செலுத்தி வந்தார்.

**கட்சிகளின் வர்க்க ஆய்வு**

“லூயி போனபர்ட்டின் பதினெட்டாம் புரூமர்” நூலில் மார்க்ஸ் தனது பங்களிப்பு என்ன என்று வரையறுத்து பேசுகிறார்.அந்த கருத்துக்கள் மிக முக்கியமானவை;

- உற்பத்தி வளர்ச்சியின் ஒரு வரலாற்றுக் கட்டத்தில் வர்க்கங்கள் உருவாகி வளர்ச்சி அடைகின்றன.
- வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது.
- இந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இடைப்பட்ட ஒரு கட்டமாக இருக்கும். இறுதியில் வர்க்கங்கள் மறைந்து வர்க்கமற்ற சமூகம் உருவாகிறது.

இந்த நூலில் மார்க்ஸ் அரசியல் கட்சிகளின் வர்க்கத் தன்மைகளைப் பற்றி பேசுகிறார். அரசு நிறுவனங்களின் வர்க்க அடிப்படை, விவசாயிகளில் அடங்கியுள்ள பல்வேறுபட்ட விவசாயப் பிரிவுகள் போன்ற விளக்கங்களுடன் அன்றைய பிரான்சில் இருந்த நிலைமைகளை மார்க்ஸ் விளக்குகிறார்.

ஒவ்வொரு நாட்டின் புரட்சிகர மாற்றத்தை சாதிக்க வேண்டும் எனில், அந்த நாட்டில் இருக்கும் குறிப்பிட்ட நிலைமைகளை, குறிப்பாக, வர்க்க நிலைமைகளை, ஆராய வேண்டும் என்று லெனின் வழிகாட்டினார். இந்த லெனின் போதனைக்கு மூலமாக மார்க்சின் இந்த நூல் அமைந்துள்ளது.

அன்றைய பிரான்சில் இருந்த நிலைமைகள் குறித்து ஏராளமான விவரங்கள் தகவல்கள் அடங்கிய தாக இந்த நூல் இருப்பதால், இதனை வாசிப்பதில் கூடுதல் கவனம் வேண்டும் என்கிறார் அய்ஜாஸ் அகமது. ஏனெனில், மார்க்ஸ் தத்துவ வரையறை களை கண்மூடித்தனமாக தனக்கு தோன்றியதை வெளிப்படுத்துகிறவர் அல்ல; மாறாக, எதார்த்த உண்மைகள், விவரங்கள், தகவல்கள், அனைத்தை யும் ஆய்வு செய்து, அந்த அடிப்படையில், பொது வான தத்துவார்த்த வரையறை முடிவுகளுக்கு வந்தடைவார்.

**முதல் பாட்டாளி வர்க்க அரசு**

1871ஆம் ஆண்டு 72 நாட்கள் பாரிஸ் கம்யூன் எனப்படும் பாட்டாளி வர்க்க அரசு பாரிஸ் நகரில் முதலாளித்துவ ஒழுங்கினை வீழ்த்தி அதிகாரத்தில் இருந்தது. பிரான்ஸ் நாட்டை மிக மோசமான போரிலும், பெரும் துயரங்களுக்கும் ஆளாக்கிய பிரெஞ்சு ஆளும் வர்க்கத்திற்கு எதிராக பாரிஸ் தொழிலாளி வர்க்கம் நிகழ்த்திய மாபெரும் புரட்சி, பாரிஸ் கம்யூன்.

தங்களுக்கென்று ஒரு அரசை ஏற்படுத்திய தோடு, அந்த அரசு ஜனநாயக கோட்பாடுகள் அடிப் படையில் செயல்பட்டு வந்தது. முதலாளித்துவ வர்க்கங்களால் உருவாக்கப்பட்ட பல பிரச்சனை களை தீர்ப்பதற்கு பாரிஸ் கம்யூன் அரசு பல நட வடிக்கைகளை எடுத்தது. இந்த அரசின் செயல்பாடு களை கார்ல் மார்க்ஸ் வெகுவாகப் பாராட்டி பதிவு செய்துள்ளார்.

1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூன் அரசு உருவா வதற்கு முன்னதாக, ஏராளமான புரட்சிகர முயற்சி களும், தோல்வி அடைந்த பல புரட்சிகர நடவடிக்கை களும் நிகழ்ந்தன. அந்த தோல்விகளால் துவளாத பாரிஸ் தொழிலாளி வர்க்கம் தனது அரசை நிறுவியது. அது ஒரு கடுமையான போராட்டம். தோல்வி அடை வதற்கான வாய்ப்புகளை பாரிஸ் கம்யூன் புரட்சிக்கு தலைமை தாங்கியவர்கள் உணர்ந்திருந்தார்கள். அத்தகைய புரட்சிகர அரசு கடுமையாக ஒடுக்கி

http://marxistreader.app
http://marxistreader.app

அழிக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு லட்சம் ஆண், பெண் போராளிகளை பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் கொடூரமாக படுகொலை செய்தது. முதலாளித்துவத்தின் ரத்தம் தோய்ந்த வரலாற்றில் பாரிஸ் கம்யூன் அழிப்பு மிகக் கோரமானது.

கார்ல் மார்க்ஸ் பாரிஸ் கம்யூன் நிகழ்வுகளின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக ஆராய்ந்து பதிவு செய்தார். “பிரான்சில் உள்நாட்டு போர்” என்கிற நூல், முதலாவது அகிலத்தில் கார்ல் மார்க்ஸ் ஆற்றிய மூன்று உரைகளின் தொகுப்பு.

1917ஆம் ஆண்டு போல்ஷ்விக்குகள் தலைமையில் லெனினது பாட்டாளி வர்க்க அரசு அமைந்தபோது, அது 72 நாட்கள் கடந்த மறுநாள் லெனின் குளிர்கால அரண்மனைக்கு வெளியே வந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் நடனமாடினார். பாட்டாளி வர்க்க புரட்சியின் முதல் முயற்சியான பாரிஸ் கம்யூன் 72 நாட்களோடு முதலாளித்துவ வர்க்கங்களால் ஒடுக்கப்பட்டது. ஆனால் அந்த தோல்வியின் படிப்பினைகளை நன்கு உணர்ந்து புதிய முயற்சியாக நவம்பர் புரட்சி நடைபெற்று 72 நாட்கள் கடந்தும் நீடிக்கிறது என்கிறபோது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியாக லெனின் அதை கொண்டாடினார்.

### எது “சர்வாதிகாரம்?”

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட வேண்டும் என்று 18வது புரூமர் நூலில் மார்க்ஸ் எழுதிய அந்த லட்சியம் பாரிஸ் கம்யூனில் நிறைவேறியது. இதில் ‘சர்வாதிகாரம்’ என்கிற சொல் கம்யூனிஸ்டுகளை ஜனநாயக விரோதிகள் என்று தூற்றுவதற்கு எதிரிகள் பயன்படுத்துகிற சொல்லாக அமைந்துள்ளது. ஆனால், பாரிஸ் கம்யூன் அரசின் அமைப்பு எப்படிப்பட்டதாக இருந்தது? உண்மையில், அந்த அரசை தொழிலாளி வர்க்கங்களின் ஒவ்வொரு உறுப்பினரும் நிர்வகித்தனர். அத்துடன் ஏழை விவசாயிகளும் அந்த அரசு அமைப்பில் அங்கம் வகித்தனர். பாரிஸ் கம்யூனை எதிர்த்தவர்களையும் கூட அரசு நிர்வாக அமைப்பில் இணைத்து அவர்களுடைய தேவைகளும் நிறைவேற்றப்பட்டன. மார்க்சியத்தின் மையமான கருத்து முதலாளித்துவ அமைப்பில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை வர்க்கங்களிடம் பரவலாக்கி ஒரு புதிய அரசை, பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை உருவாக்க வேண்டுமென்பதுதான்.

இதையே லெனின் ஒரு கேள்வி எழுப்பி விடை கண்டார். ரஷ்யாவில் புரட்சியின்போது வாழ்ந்து கொண்டிருந்த பாட்டாளி வர்க்க உறுப்பினர்கள் இருபது கோடி மக்கள். ஏன் அவர்கள் அனைவருக்கும் அரசு நிர்வாக பொறுப்புக்களை பிரித்தளிக்கக் கூடாது? இதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். உண்மையில் இது பெரும்பான்மையின் சர்வாதிகாரம். முதலாளித்துவ அரசு ‘ஜனநாயகம்’ ‘தாராளவாத’ அரசு என்று ஆடம்பரமாக அறிவித்து, உண்மையில் முதலாளித்துவ சிறுபான்மை சர்வாதிகாரத்தை மேற்கொண்டு, பெரும்பான்மை மக்களை அடக்கி ஒடுக்கி சுரண்டலுக்கு ஆளாக்கி வருகிறது. இந்த கருத்துக்களை பாரிஸ் கம்யூன் அனுபவத்தின் அடிப்படையில் லெனின் ‘அரசும், புரட்சியும்’ நூலில் விரிவாக விளக்குகிறார்.

நவம்பர் புரட்சி மிகப்பெரும் தத்துவார்த்த விவாதங்களால் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வை உயர்த்தியதன் விளைவாகவே வெற்றி கண்டது. இந்த தத்துவார்த்த விவாதங்களுக்கு லெனினும் அவரது தோழர்களும் முக்கிய பங்காற்றினார்கள். பாரிஸ் கம்யூன் விஷயத்திலும் இதுபோன்றே நிகழ்ந்தது. இதுவே மார்க்சை வெகுவாக ஈர்த்தது.

பாரிஸ் கம்யூன் தலைமை கவனிக்க தவறிய பல விஷயங்களையும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் பதிவு செய்துள்ளனர். இவை அனைத்தும் எதிர்கால புரட்சிகளுக்கு படிப்பினைகளாக அமைந்தன. தற்போதும் பாரிஸ் கம்யூன் நிகழ்ந்த பிரான்சில் அந்த நினைவுகளை பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் அழித்தொழிக்க பெரும் முயற்சிகள் செய்தாலும், உலகப் பாட்டாளி வர்க்கம் சோவியத், சீன புரட்சிகள் உள்ளிட்ட புரட்சிகர மாற்றங்களிலிருந்து மேலும்மேலும் படிப்பினைகளைக் கற்று முன்னேறும். அந்த வரலாற்றில் பாரிஸ் கம்யூன் முக்கிய இடம் பெறும்.

ஜெர்மன் சித்தாந்தம், கம்யூனிஸ்ட் அறிக்கை, லூயி போனபர்ட்டின் பதினெட்டாம் புரூமர், பிரான்சில் உள்நாட்டுப் போர் ஆகிய நான்கு நூல்களும் மார்க்சின் புரட்சிகர அரசியலையும், தத்துவ கருத்தாக்கங்களையும் உள்வாங்கிக் கொள்ள தேவையான அடிப்படை நூல்கள். ஏற்கனவே மார்க்சியம் அறிந்தவர்கள் மார்க்சிய வாசிப்பை மேற்கொண்டவர்கள், மாற்றத்திற்கான அரசியல் நாட்டம் கொண்டவர்கள் அனைவரும் மேற்கண்ட நூல்களை ஆழமாக வாசிக்க இந்த உரையாடல் நூல் மிகச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

இதனைச் சிறப்பாக தோழர் ச.லெனின் மொழியாக்கம் செய்துள்ளார். பாரதி புத்தகாலயம் மிக நேர்த்தியாக இந்த நூலை வெளியிட்டுள்ளது. மார்க்சியர்கள், முற்போக்காளர்கள் மட்டுமல்லாது, இளைஞர்கள், பொது மக்களிடம் வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்தும் மகத்தான பணி இது. நூல் தயாரிப்பில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டுக்கள்! ■

http://marxistreader.app



# நாடாளுமன்றம் என்ற களத்தில்..

**டி. கே. ரங்கராஜன்**

**(தோழர் டி.கே. ரங்கராஜன் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் குறித்த ‘தொடர் ஓட்டம்’ என்ற நூலில் இருந்து சில பகுதிகள்)**

### நிதித்துறைக்கான குழுவும் பணமதிப்பு நீக்கமும்

இந்தக் குழுவில் இருக்கும்போது பணமதிப்பு நீக்கம் பற்றிய பிரச்சனை வந்தது. இது பற்றி விவரங்களை அறிய இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர்களாக இருந்த ரகுராம் ராஜன், உர்ஜித் படேல், சக்திகாந்த தாஸ் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். இவர்கள் தவிர வங்கியாளர்கள் சங்க (Bankers Association) நிர்வாகிகளையும் அழைத்து விசாரித்தோம். எவரும் இது பற்றி தங்களுக்குத் தெரியும் என்றோ தங்களுடன் விவாதிக்கப்பட்டதாகவோ கூறவில்லை. அமைச்சர்கள் கூட தேநீர் விருந்துக்கு என்று அழைக்கப்பட்டதாகவும் அங்கே தான் பிரதமர் டிவியில் பேசப் போகிறார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்தக் குழுவில் உர்ஜித் படேலிடம் கேள்விகள் கேட்டபோது அவரைப் பேசவிடாமல் மன்மோகன் சிங் தடுத்ததோடு, கூட்டத்தையும் முடிக்கச் சொல்லிவிட்டார். குழுவின் தலைவராக இருந்த வீரப்ப மொய்லியும் அப்படியே செய்துவிட்டார். இதுதான் ஆளும் வர்க்கத்தைப் பாதுகாக்கும் அதிகார வர்க்கப் போக்கு என்பது.

### பாதுகாப்புத்துறை நாடாளுமன்றக்குழு அனுபவங்கள்

பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தித்துறை 200 வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்திடம்தான் இருந்தது. இதற்கொரு காரணம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோர் ஆயுதங்களை எடுத்துச் சென்றுவிடக் கூடாது என்பதுதான். பிரிட்டனில் இது தனியாரிடம் இருந்தது என்பதை கவனித்தால் இது புரியும். நாடு விடுதலை அடைந்தபின் பாதுகாப்புத் துறைக்கான தொழிற்சாலைகளில் 80 சதவீதம் அரசாங்கத்திடம்தான் இருந்தது. இப்போது இதில் தனியாரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு நேரடி முதலீடும் வரலாம் என்று மோடி அரசு கூறிவிட்டது.

டாடா நுழைந்துவிட்டது, ரிலையன்ஸ் வந்துவிட்டது, மஹிந்திரா புகுந்திருக்கிறது, கல்யாண் குழுமம் நுழைந்திருக்கிறது, எல் அண்ட் டி வந்துவிட்டது – இவர்கள் 100 சதவீதம் முதலீடு செய்யலாம். இப்படிப்பட்ட நடவடிக்கை ஆசியா கண்டத்திலும் ஆப்பிரிக்கக் கண்டத்திலும் ஆயுதப் போட்டியை உருவாக்கும். இது அத்துடன் நிற்காது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போட்டி வரும்; இந்தியாவுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் போட்டி வரும்.

பாதுகாப்புத்துறையில் தனியார் மயம் என்பது காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கியது. ஆனால் அதனை ஓரளவு தடுத்து நிறுத்த முடிந்தது. இப்போது ஆர்எஸ்எஸ்சின் அரசியல் பிரிவான பிஜேபி ஆட்சி முழுபலத்துடன் இருப்பதால் எதையும் பொருட்படுத்தாமல் தீவிரமாக செயல்படுத்துகிறது.

இதன் பொருள் என்னவென்றால் ஆயுதங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்வதாகும். அதாவது சமாதான சக வாழ்வு என்ற கோட்பாட்டிலிருந்து இந்தியா வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது என்பது பொருள். ஆயுதங்களின் அதிகப்படியான உற்பத்தி என்பது சந்தையைத் தேடுவதாக – அவற்றுக்கான தளங்களை அமைப்பதாக – மாறிவிடும். இது நாட்டுக்கு நல்லதல்ல என்பதை நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டியும் வலியுறுத்தியும் வருகிறோம்.

### ஒழுங்கைக் குலைப்பதும் நியாயம்தான்

ஜவஹர்லால் நேரு ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்திற்குள் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்காக மக்களவையிலிருந்து வெளியேற்றப்பட்ட முதல் உறுப்பினர் என்ற பெருமை தோழர் அனந்தன் நம்பியாருக்கு உண்டு. நம்பியார் நடந்து கொண்ட விதத்தை எஸ்.ஏ.டாங்கே கண்டித்தார். ஆனால் சுந்தரய்யா வரவேற்றார். ஒரே கட்சிதான் என்றாலும் நாடாளுமன்ற அமைப்பைப் பற்றிய இருவித அணுகுமுறை இருந்துள்ளது. நாடாளுமன்றத்திற்குள் இப்படித்தான் நடந்துகொள்ளவேண்டும் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை, அவற்றை வகுத்தவர்களின் நோக்கத்திற்கு

http://marxistreader.app